**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**CC.No.118/2020**

**PW–1**

04.11.2025

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி.அனிதா | Caste | |
| க/பெ. | திரு. ராஜப்பா | Calling | வீட்டுக்குடிதனம் |
| Village | நெ.1 டோல்கேட் | Religion | |
| Taluk | ஸ்ரீரங்கம் | Age | 42/2025 |

**அரசு தரப்பில் முதல் விசாரணை-**

நான் தற்போது நெ.1 டோல்கேட்டில் வசித்து வந்து வீட்டுக்குடிதனம் நடத்தி வருகிறேன். கடந்த 08.10.2019 ம் தேதி பகல் 12 மணியளவில் வீட்டில் இருந்து கடைக்கு பொருள் வாங்குவதற்காக நடந்து சென்றுக்கொண்டு இருந்தேன். பிறகுபொருள்வாங்கிவிட்டு வீட்டிற்கு நானும் சந்திராவும் ஓம் சக்தி மளிகை கடை அருகே நடந்து வந்துக்கொண்டிருந்தோம். அப்போது இருசக்கர வாகனத்தில் இரண்டு பேர் வந்து பின்னால் அமர்ந்திருந்த நபர் எனது கழுத்தில் அணிந்திருந்த தங்க தாலி செயினை அறுத்துவிட்டு இருசக்கர வாகனத்தில் அங்கிருந்து சென்றுவிட்டனர். நான் கத்தி கூச்சலிட்டேன் பிறகு ராஜேந்திரன் என்பவர் துரத்திக் கொண்டு ஓடினார் . பிறகு கொள்ளிடம் காவல் நிலையத்தில் ஒரு புகார் அளித்தேன். 4 ½ பவுன் முகப்பு வைத்த தாலி செயின் -1, அதில் 4 காசு , இரண்டு குழாய், இரண்டு குண்டு , தாலி மொத்தம் 6 ½ பவுன் ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் எழுத்துமூல புகார் நான் கொடுத்துதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் ஆவணம் அ .சா.ஆ.1 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** பிறகு போலீசார் ஒரு அளித்து நகை கிடைத்துவிட்டதாக கூறி நகையை அடையாளம் காட்டினேன் பின்னர்நீதிமன்றத்தில் மனு செய்து நகைகளை பெற்றுக்கொண்டேன் . தற்போது என்னிடம் காட்டப்படும புகைப்படத்தில் உள்ள நகையைதான் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டேன். **அந்த புகைப்படத்தின் (எண்ணிக்கை -5) அ.சா.ஆ.2 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** போலீசார் விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

**புகாரை நான்தான் கைப்பட எழுதினேன் .புகாரில் மேலே தேதி குறிப்பிடவில்லை ஆனால் பின்பக்கம் குறிப்பிட்டுள்ளேன். நான் சொன்ன தேதியில் சம்பவம் நடைபெறவில்லை என்றோ காணமல்போன பொருளுக்கு புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.**

Sd/-xxxx

Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made his signature

Sd/-xxxx

District Munsif – Cum - Judicial Magistrate,

Srirangam.

Advocopy

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**
**CC.No.118/2020**
**PW-2**

04.11.2025

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. ராஜேந்திரன் | Caste | |
| த/பெ. | திரு. வைத்தியலிங்கம் | Calling | அரசு பணி ஓய்வு |
| Village | நெ.1 டோல்கேட் | Religion | |
| Taluk | ஸ்ரீரங்கம் | Age | 67/2025 |

**அரசு தரப்பில் முதல் விசாரணை-**

நான் தற்போது நெ .1 டோல்கேட்டில் வசித்து வருகிறேன் . அ.சா.1 அணிதா எனது வீட்டின் எதிர் வீட்டில் வசித்து வருகிறார் கடந்த 08.10.2019 ம் தேதி மதியம் 12 மணிஇருக்கும் நான் ஓம்சக்தி மளிகைகடை அருகே நின்றுக்கொண்டிருந்தேன். அப்போது அணிதா தனது செயினை பறித்துவிட்டு ஓடிவிட்டதாக கத்திக்கொண்டு இருந்தார் . நான் அந்த செயினை பறித்த நபர்களின் இருசக்கரவாகனத்தை துரத்தி சென்றேன் . என்னால் அவர்களை துரத்தி பிடிக்க இயலவில்லை அவர்கள் பைபாஸ்சையில் ஏறிவிட்டார்கள் . அதன் பிறகு அணிதா காவல் நிலையத்தில் புகார் அளித்தார் . நான் துரத்தி சென்றபோது செயினை பறித்தவர்களை பார்த்தேன் . இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் வெள்ளை சட்டை அணிந்திருக்கும் ( ஏசுதாஸ் (எ) சம்சுதீன் (எ) பாபு ) நபர்தான் அன்று இருசக்கர வாகனத்தில் பின்புறம் உட்கார்ந்து செயினை பறித்தவர் என்று எதிரியை சுட்டிகாட்டி அடையாளம் காட்டுகிறார். பின்னர் அ.சா.1 புகார் அளித்தார் . போலீசார் விசாரணையில் எதிரியை பற்றி அடையாளம் காட்டினேன் . போலீசாரும் சிசிடிவு புட்டேஜ்களைபார்த்து உறுதி செய்துகொண்டனர் . எதிரிகள் வந்த இருசக்கர வாகனம் appache நிறுவனத்தை சார்ந்தது அதன்நெம்பர் பிளேட் சற்று உடைந்து இருந்தது . அதனால் என்னால் இருசக்கர வாகனத்தின் நெம்பரை சரியாக குறித்து கொள்ள இயலவில்லை. போலீசார் இது சம்பந்தமாக விசாரணை செய்தனர்.

Approved

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

**என்னை போலீசார் விசாரரணை செய்தபோது கடையில் சாமான் வாங்கிக்கொண்டு இருந்தேன் என்று கூறினேன் என்றால் சரியல்ல . பக்கத்தில் நின்றுக்கொண்டு இருந்தேன் என்று கூறினேன் . போலீசார் விசாரணை செய்தபோது செயின் பறித்த நபரின் அடையாளம் குறித்து கூறினேனா என்றால் கூறினேன் . அதை போலீசார் குறித்துக்கொண்டனர். என்னை அருகில் வைத்து சிசிடிவி புட்டேஜ் கேமிராவை ஆய்வு ெ◌செய்தனர் என்றால் சரிதான் . நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் அ.சா.1 எனது வீட்டிற்கு எதிர் வீட்டுகாரர்ப என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

Sd/-xxxx

Taken down by me in open court , read over
to his and accepted by him as correct and
made his signature

Sd/-xxxx

District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam.

advocate

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**
**CC.No.118/2020**
**PW-3**

04.11.2025

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. ரவி | Caste | |
| த/பெ. | திரு. சின்னசாமி | Calling | டிரைவர் |
| Village | நெ.1 டோல்கேட் | Religion | |
| Taluk | ஸ்ரீரங்கம் | Age | 50/2025 |

**அரசு தரப்பில் முதல் விசாரணை-**

நான் தற்போது நெ .1 டோல்கேட்டில் வசித்து வந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன் . என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் . கடந்த 2019 வருடத்தில் 10 வது மாதம் தேதி ஞாபகம் இல்லை ஒருநாள் டோல்கேட் ஓம்சக்தி மளிகை கடை அருகே சென்றுக்கொண்டிருந்தேன்.அப்போது போலீசார் செயின் பறித்தது தொடர்பாக drawing வரைந்தனர். அப்போது என்னுடன் அந்த ஆவணத்தில் ரகுபதி என்பவரும் கையொப்பம் செய்து கொடுத்தார் . அந்த பார்வை மகஜர் ஆவணம் அ.சா.ஆ-3 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. போலீசார் விசாரணை செய்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>

நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்து என்று எனக்கு தெரியாது என்றால் திருட்டு சம்பந்தமாக வரைபடம் வரைந்தது பற்றி இருந்தது . ஓம் சக்தி மளிகை கடையில் இருந்து எனது வீடு 300 மீட்டர் தூரம் இருக்கும் ஓம்சக்தி மளிகை கடையில் அருகில் நிறை வீடு இருந்தது என்றால் இருந்தது . மேற்படி கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து போட்டேன் என்றால் சரியல்ல.

Sd/-xxxx
Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made his signature
Sd/-xxxx
District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam.

web copy